மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழக அரசு உறுதி செய்திருக்கிறது; உறுதியோடு இருக்கிறது. இது பற்றிய பிரச்சினை விவாதத்திற்கு வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொன்ன ஆதாரத்தையும் தமிழக அரசு பயன்படுத்தும்.

வாசுதேவநல்லூர் பகுதியில் 'கூட்டு குடிநீர்த்திட்டம்'

* வினா எண். 14 திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாசுதேவநல்லூர் பகுதியில் 'கூட்டு குடிநீர்த்திட்டம்' ஒன்றை நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு ஆகும் செலவுத்தொகை எவ்வளவு?

(இ) இத்திட்டம் நிறைவேற்ற எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

அ) திட்டமிட்டுள்ளது.

ஆ) இத்திட்டத்தின் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இப்பணிகள் முடிவுற்ற பின்னே திட்டத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்படும்.

(இ) ஆய்வுப் பணிகள் முடிவுற்ற பிறகே திட்டம் நிறைவேற ஆகும் காலத்தைக் கணக்கிட இயலும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஒரு இலட்சம் மக்கள் வாழக்கூடிய 4 பேரூராட்சிகள்—சிவகிரி, ராயகிரி, வாசுதேவநல்லூர், விசுவநாதபேரி—அவைகளை ஒட்டி 10 ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கே 'சலைன் வாட்டர்' அதிகமாக இருக்கிறது. அங்கிருந்து 5 கிலோ மீட்டர் மேற்கே சென்று, அங்கிருந்து தண்ணீர் கொண்டுவந்தால் இந்த ஒரு இலட்சம் மக்களுக்கு அதை பயன்படுத்த முடியும். ஆகவே, இந்த திட்டத்தை துரிதப் படுத்த தேவையான ஆய்வு செய்வதற்கு ஏற்கெனவே அரசே ஆய்வுசெலவைப் போட்டு, பின்னால் வசூல் செய்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் ஆய்வுப் பணிகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட இருக்கும் ஆய்வு மதிப்பீடுத் தொகையை திட்டமதிப்பீட்டுச் செலவில் இணைக்கலாம் என்றும் பின்னால் அரசு ஒப்புதல் உடன்

1980 ஜூலை 17]

அனுமதிக்கப்படும்போது இந்தச் செலவுத் தொகையை திரும்ப வாரியத்திற்கு ஒப்படைக்கலாம் என்பதற்கு ஒரு தீர்மானம் போட்டு அனுப்புமாறு இந்த 4 பேரூராட்சிகளையும் வாரியம் கேட்டுக்கொண்டது.

[முற்பகல் 9-30]

அப்படிக் கேட்டுக்கொண்டதின் பேரில் விஸ்வநாதப்பேரியைத் தவிர மற்ற மூன்று பேரூராட்சிகளிடமிருந்தும் தீர்மானம் பெறப்பட்டுள்ளன. ஆனால் விஸ்வநாதப்பேரியிடமிருந்து பதில் வந்த பிறகு உடனடியாக ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனைக் கிராமங்கள் பயன்படும்? எவ்வளவு மக்கள் பயனடைவார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக வாசுதேவ நல்லூர், ராஜகிரி, சிவகிரி, விஸ்வநாதப்பேரி ஆகிய 4 பேரூராட்சிகளும் அவைகளைச் சார்ந்த சிற்றூர்களும் குடிநீர் வசதி பெறும். அந்த வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. மக்கள் தொகை எவ்வளவு, எவ்வளவு தொகை செலவாகும் என்பதெல்லாம் ஆய்வுக்குப் பின்னர்தான் தெரியும். இப்போது வேறு தகவல்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, இதுபோன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டம் வறட்சி நிவாரணப் பணி என்ற வகையிலே ஒரு பணி ஆரம்பிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகி விட்ட பிறகும் பணி தொடராமல், $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு விட்ட பிறகு இன்றைய தினம் இந்தத் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் செய்வதா ஊராட்சி ஒன்றியம் செய்வதா என்ற நிலையில் அந்தத் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தையும் நிறை வேற்ற குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, எந்த இடத்தில் இப்படி இருக்கின்றது என்ற தகவலைச் சொல்லி தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவரவர்களே, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தமட்டில் 3 பஞ்சாயத்துக்களிடமிருந்து சம்மதம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். விஸ்வநாதப்பேரியிடமிருந்து மட்டும் இன்னும் தீர்மானம் வந்து சேரவில்லை. ஆகவே அங்கிருந்து ஒப்புதல் பெறப் பட்ட பிறகு ஆய்வு செய்யப்படும் என்று அமைச்சரவர்கள்

சொன்னார்கள். தற்போது விஸ்வநாதப்பேரி ஊராட்சி மன்றம் கலைக்கப்பட்ட நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குத் தேர்தல் எப்போது நடக்கும் என்கின்ற உத்தரவாதம் இல்லை. ஆகவே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற வகையில் மூன்று பஞ்சாயத்துகளிடமிருந்து ஒப்புதல் வரப்பெற்று விட்டதால் அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை துரிதமாக ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, ஸ்பெஷல் ஆபீஸர் தானே தீர்மானத்தை பாஸ் செய்து அப்படி ஒரு கடிதத்தை எழுதலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாகுபுரத்தில் மூடிக்கிடக்கும் தாரங்கதரா கெமிகல்ஸை சேர்ந்த பி. ஆர். சி. தொழில் நிறுவனம்.

* வினா எண். 15

திரு. சி. கேசவ ஆதித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகனேரியில் உள்ள சாகுபுரத்தில் தாரங்கதரா கெமிக்கல்ஸை சேர்ந்த பி.ஆர்.சி. தொழில் நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேல் மூடி சுமார் முன்னூறு தொழிலாளர்கள் வேலை இழந்து இருப்பது அரசினருக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) ஆம்.

(ஆ) ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்கள், தங்களுக்குச் சேர வேண்டிய இழப்பீடு, மற்ற தொகையினையும் பெற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் இப்பிரச்சினை குறித்து எந்தத் தொழிற் தகராறும் எழுப்பவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகனேரியில் உள்ள சாகுபுரத்தில் உள்ள தாரங்கதரா கெமிக்கல்ஸ்—ஐச் சேர்ந்த பி. ஆர். சி. தொழில் நிறுவனம் கடந்த மூன்றாண்டு காலமாக மூடப்பட்ட நிலையில் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது இழப்பீடு, மற்ற தொகைகள் பெற்றுக்கொண்டுள்ள காரணத்தால் அங்குள்ள தொழிலாளர்கள் எந்தப் பிரச்சினையும் எழுப்பவில்லை என்று சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலை தற்போது நடைபெறுகிறதா அல்லது அப்படியே மூடிக்கிடக்கின்றதா? அப்படியானால் அங்கு பணிபுரிந்து வேலையிழந்தவர்களுக்கு வேறு வேலை